மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜு அவர்கள்.*

திரு. கடம்பூர் ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்லில் வடித்த தெய்வமும் கருணைபுரிய நாளாகும் என்று பொன்னில் வார்த்த உருவமாய் தமிழ் பூமிக்கு வந்த தாய் உருவ தெய்வமே; வணங்கிய கரங்கள் விலகும் முன்னே வரம் தரும் அன்னையே; கும்பிட்ட கரங்கள் பிரியும் முன்னே கோரிக்கைகளை நிறைவேற்றும் ஒப்பில்லா உயர் தலைவியே; (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகின்றேன். இல்லை என்பது இல்லை நாங்கள் வாழும் நாட்டிலே என்கின்ற புரட்சித் தலைவரின் வைர வரிகளை நடைமுறைப்படுத்தி, வைர விழா கண்டு, நாட்டில் இல்லாமையைக் களைந்து புதிய சரித்திரம் படைத்து வருகின்ற மாண்புமிகு அம்மா அவர்களே, தூத்துக்குடி மாவட்டத்தின் இரண்டாவது பெரிய நகரமான கோவில்பட்டியில் சுற்றுலா மாளிகை இல்லை என்ற குறையை இல்லாமல் செய்து, எங்கள் மாவட்டத்திற்கு வெள்ளி விழாப் பரிசாக வழங்கிய இதய தெய்வம் அம்மா அவர்களை வணங்கி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நன்றி கூறி, அமர்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 128, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். கணிதா சம்பத், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

128—

கால்நடை மருந்தகம்

***8831—திருமதி எஸ். கணிதா சம்பத்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுராந்தகம் தொகுதி, அனந்தமங்கலம் கிராமத்தில் கால்நடை மருந்தகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

2013 *ஏப்ரல்* 2]

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

வைர விழா கண்ட இந்த சட்டமன்ற வரலாற்றிலேயே இல்லாத வகையில் எங்களுடைய கால்நடை பராமரிப்புத் துறைக்கு ரூ.1,082 கோடிகளை அம்மா அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அடிப்படையிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற மதுராந்தகம் தொகுதி, அனந்தமங்கலம் கிராமத்திலே நம்முடைய அரசு விதிமுறைகளுக்குட்பட்டு 3,000 கால்நடைகளுக்கு மேல் இருப்பதால் அங்கே ஒரு கால்நடைக் கிளை நிலையம் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் அமைக்கப்படும் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். கணிதா சம்பத் அவர்கள்.*

திருமதி எஸ். கணிதா சம்பத்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களுக்காக பல நல்ல திட்டங்களை அன்றாடம் செயல்படுத்திக் கொண்டிருக்கும் நம் அம்மா; தமிழர்களின் அடையாளம் நம் அம்மா; இந்தியாவிலேயுள்ள தலைவர்களுக்கு இல்லாத பெருமை நம் அம்மாவிற்கு உண்டு. வெற்றியின் அடையாளம் நமது அம்மா. பொறுமை, துணிவு, விடாமுயற்சி இவை அனைத்தும் நம் அம்மாவிற்கு என்றும் உண்டு. நாம் அன்றாடம் வணங்கும் குல தெய்வம் அம்மா அவர்களின் பொற்பாதங்களைத் தொட்டு வணங்கி (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய மதுராந்தகம் தொகுதியில், அச்சரப்பாக்கம் ஒன்றியத்தில், அனந்தமங்கலம் ஊராட்சியில் கால்நடை மருந்தகம் அமைக்க ஆணையிட்ட மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

ஏற்கெனவே அனந்தமங்கலத்தில் கால்நடை துணை மருந்தகம் இருந்து வந்தது. அதை சென்ற மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் எடுத்துவிட்டார்கள். இருப்பதை எடுப்பது முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சி. இல்லாததைக் கொடுப்பது எங்கள் அம்மாவின் ஆட்சி. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தக் கால்நடை மருந்தகம் அமைத்துத் தந்தால் மூன்று மாவட்டங்கள் பயனடையும். விழுப்புரம் மாவட்டம், திருவண்ணாமலை மாவட்டம், காஞ்சிபுரம் மாவட்டம் ஆகிய மூன்று மாவட்டங்களில் உள்ள 17 கிராமங்கள் பயனடைகின்றன என்பதைத் தெரிவித்துக்கொண்டு, மீண்டும்

மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

முற்பகல் 10—45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 129, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

129—

காகித ஆலை

***20949—திரு. கே. உலகநாதன்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவாரூர் மாவட்டத்தில் காகித ஆலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

ஒரு காகிதத் தொழிற்சாலை நிறுவப்பட வேண்டுமானால், மூலதனமாக ரூ.1,200 கோடியும், சுமார் 1,000 ஏக்கர் நிலப்பரப்பும், ஆண்டு ஒன்றுக்கு 6 இலட்சம் மெட்ரிக் டன் அளவு கரும்புச் சக்கையும், 1 இலட்சத்து 55 ஆயிரம் டன் அளவு கொண்ட கூழ் மரங்களும், அதாவது தைல மரம் மற்றும் சவுக்கு கூழ் மரங்களும் தேவைப்படும். மேலும், வருடம் முழுவதும் ஆலைக்கு நாள் ஒன்றுக்கு சுமார் 50,000 கன மீட்டர் அளவுக்குத் தண்ணீர் கிடைக்க வேண்டும். திருவாரூர் மாவட்டத்தில் சர்க்கரை ஆலைகளும் இல்லை, கூழ் மரங்களும் இல்லை. தொழிற்சாலைகள் அமைப்பதற்கு சாத்தியக் கூறுகள் இல்லையென்றாலும், தொழில் முனைவோர் முன்வந்தால், வேறு தொழிற்சாலை அமைக்க மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலித்து முடிவெடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.*